# 03-11-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : வோல்ஸ்ட்ரீட் முற்றுகை (Occupy Wall Street).**

**தொடக்கவுரையாடல் : விஜயகுமார் சுகுமாரன்**

"கொள்ளையடிக்கும் முதலாளித்துவம் ஒரு சிக்கலான தொழில்துறை அமைப்பையும் மேம்பட்ட தொழில்நுட்பதையும் உருவாக்கியுள்ளது. அது ஜனநாயக நடைமுறையில் ஒரு கணிசமான நீடிப்பு மற்றும் சில தாராளவாத பெறுமதிகளுக்கு (values) அனுமதி வழங்கியுள்ளது, ஆனால் அது இப்போது அதன் வரையறைக்குள் அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளதுடன் அதில் இருந்து மீண்டாகவேண்டும். இந்த முறைமை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு பொருத்தமற்றது." - நோம் சோம்ஸ்கி (1960களில் கூறியது)

அமெரிக்க முதலாளியத்தினதும் உலக முதலாளியத்தினதும் நெருக்கடியின் அண்மைக் கால உச்சப் பிரதிபலிப்பாக வோல் ஸ்ட்ரீட் முற்றுகைப் போராட்டம் செப்டம்பர் 17ம் திகதி முதல் இடம்பெற்று வருகிறது. அமெரிக்காவில் நிவ்யோர்க் நகரின் வோல் ஸ்ட்ரீட்டில் மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் அமெரிக்காவின் 70 முக்கிய நகரங்களில் இடம்பெற்றுவருகின்றது. உலகம் பூராகவும் (900 நகரங்களில் என வோல் ஸ்ட்ரீட் முற்றுகையின் உத்தியோக பூர்வ இணையதளம் குறிப்பிடுகின்றபடி) பல நகரங்களில் இப்போராட்டம் இடம்பெறுகிறது.

பெருவணிக நிறுனங்களுக்குச் சார்பான ஊடக நிறுவனங்களினால் இந்தப் போராட்டம் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த இருட்டடிப்பினால் இப்போராட்டத்தின் மூலம் வெளிப்பட்டுள்ள அமெரிக்க முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மறுபக்கத்தை மறைக்க முடியாது போயுள்ளது.

வோல் ஸ்ட்ரீட் முற்றுகை போராட்டத்திற்கான அடிப்படைகளை விளங்க, பின்வரும் அமெரிக்க அரசின் புள்ளிவிபரங்கள் சில அடிப்படைகளைத் தரவல்லன. 1979-2009 ஆண்டுவரையான காலத்தில் 1% பெருமுதலாளிகள் 275% வருமான அதிகரிப்பைப் பெற்றுள்ள போதும், 60% மக்கள் 40% வருமான அதிகரிப்பையே இக்காலத்தில் பெற்றுள்ளனர். 1% பெருமுதலாளிகள் அமெரிக்க மொத்த வருமானத்தின் 40%ஐ தமது கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கினறனர். உயர் வருமானத்தை கொண்ட 400 வரி வழங்குனர்களின் வருமானம் 392% வளர்ச்சியடைந்து அரச வரிவிதிப்பு 37% குறைக்கப்பட்டுள்ளது.

தொழிலில் இருந்து பணியாளர்கள் நீக்கம், புதிய வேலை வாய்ப்புகளின் வீழ்ச்சி, வீட்டுக் காப்புறுதித் திட்டங்களின் கீழ் மக்களிடம் இருந்து வீடுகள் காப்புறுதி நிறுவனங்களினால் பறிக்கப்படல், சுகாதாரச் செலவுகளின் வேகமாக அதிகரிப்பு, கடன் பெற்றும் (கல்லூரி மற்றும் பல்லைக்கழக கல்வியாகிய) மூன்றாம் நிலைக் கல்வியை மேற்கொள்ளமுடியாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற காரணிகள் இப்போராட்டத்திற்கான நேரடிக்காரணிகளாக இருந்துள்ளன.

அமெரிக்காவையும் உலகையும் ஆட்டுவிக்கும் பெருவணிக நிறுவனங்கள், வங்கிகளின், பங்குப்பரிவர்தனைகள் இடம்பெறும் முக்கிய இடமே 'வோல் ஸ்ட்ரீட்' ஆகும். வோல் ஸ்ட்ரீட் முற்றுகை என்பது முதலாளித்துவத்தின் கருவறையை முற்றுகை இடுவதற்குச் சமம் என கூறுவதற்கு இதுவே காரணமாகும்.

அமெரிக்காவையும் உலகையும் ஆட்டுவிக்கும் பெருவணிக நிறுவனங்கள், வங்கிகளின், பங்குப்பரிவர்தனை நிலையம் என்பன நிலைபெற்றுள்ள இடமே வோல் ஸ்ட்ரீட் ஆகும். 1% பெருவணிக நிறுவனங்களை எதிர்த்து, "நாம் பாதிக்கப்படும் 99%" என்ற அடிப்படையில் மக்கள் ஒன்றுமையான போராட்டத்தின் மூலம் தமது பலத்தை அமெரிக்க அரசிற்கும், பெருவணிக நிறுவனங்களுக்கும் காண்பித்து வருகின்றனர்.

வோல் ஸ்ட்ரீட் முற்றுகைக்கான அடிப்படையாக, கனேடிய செயற்பாட்டு குழுவான "Adbusters" இருந்துள்ளது. இது Adbusters என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்தது. இந்தச் சஞ்சிகை அடிப்படையில் "நுகர்வுக் கலாசாரத்தை" எதிர்ப்பதை நோக்காக கொண்டிருந்ததுடன், பொருளாதார ஏற்றத்தாழ்வு இடைவெளி அதிகரிப்பு, பெருவணிக நிறுவனங்களின் பேராசை, அரசின் மீதான அவைகளின் ஆதிக்கம் என்பவற்றை எதிர்த்து அமெரிக்க மக்கள் மத்தியில் தனது பிரசாரத்தை மேற்கொண்டு வந்தது.

போராட்டத்தில் பல்வேறு கருத்தியல்களையும் கொண்டவர்கள் ஒற்றுமையாகப் பங்கு கொள்வதுடன், இன, பால், மத வேறுபாடுகள் இன்றி அனைவரும் தமது பொது எதிரியாகப் பெருவணிக நிறுவனங்களை அடையாளம் கண்டுள்ளமையை அவர்களின் போராட்டங்களில் இருந்து காண முடிகிறது. ஆரம்பத்தில் இளைஞர்களின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் தற்போது அனைவரும் பங்குபற்றும் போக்கு வலுத்துள்ளது.

அமெரிக்கப் பொது மக்களின் ஆதரவை நாளுக்கு நாள் பெற்று வரும் இப்போராட்டம் பழைய போராட்டங்களின் அடிப்படைகளைப் புதிய வடிவங்களில் பிரயோகித்து வருகின்றது.

மிகுதி அடுத்த பக்கம்..

## அடுத்து வரும் தலைப்புக்கள்

ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்
10-11-2011 | பொது உரையாடல்

சமஸ்கிருத மயமாக்கம்
17-11-2011 | சத்தியதேவன்

சோதிடம்
24-11-2011 | மௌ. மதுவர்மன்

## வோல் ஸ்ட்ரீட் முற்றுகைக் காட்சிகள்




















### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழினுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழினுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வோல் ஸ்ட்ரீட் முற்றுகை

*முன்பக்கத் தொடர்ச்சி..*

போராட்டத்திற்குத் தலைமை தாங்குபவர்கள் என்று எவரும் இல்லை. ஏற்பாட்டாளர்கள் ஊடாகவே இந்தபோராட்டங்கள் நடத்திச் செல்லப்படுகிறது. "நிவ்யோர்க் சிட்டி" பொதுச் சபையில் கூடியே தமது தீர்மானங்களை எடுக்கின்றனர். இப்போராட்டம் தலைமைத்துவப் படிநிலைகளை நிராகரிக்கின்றது. இதில் இருந்து எந்தவிதமான அதிகார கட்டமைப்பையும் நிராகரிக்கும் அராஜகவாதக் (அரசின்மைவாதம்/ *anarchism*) கருத்தியலை இப்போராட்டம் முன்னிலைப்படுத்தியுள்ளதைக் காணலாம்.

சமூக வலைத்தளங்களான Facebook, Twitter என்பன இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைப்பதிலும் தொடர்ந்து கொண்டு நடத்துவதிலும் முக்கிய பங்காற்றியுள்ளன. இவற்றுக்கு மேலாக ஊடக நிறுவனங்கள் வோல் ஸ்ட்ரீட் முற்றுகைப் போராட்டத்தைப் பேச மறுத்துவரும் நிலையிலும் புனையப்பட்ட செய்திகளை வழங்கி வரும் நிலையிலும் youtube முக்கிய ஊடகமாகப் போராட்டத்தில் ஈடுபடுவர்களினால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

முதலாளித்துவத்தின் கருவறையை முற்றுகையிட்டுள்ள இந்தப் போராட்டத்தை முறியடிப்பதற்குப் பெருவணிக நிறுவனங்களும் அதற்குச் சார்பான ஊடக நிறுவனங்களும் பல முனைத் தந்திரோபாயங்களை வகுத்து முயற்சி எடுத்து வருகின்றன. இதற்காக, போரட்டத்தைக் கொச்சைப்படுத்தும் திட்டமிட்ட நடவடிக்கைகளை அவை முடுக்கிவிட்டுள்ளன. FOX News, CNN போன்ற ஊடகங்கள் இதில் குறிப்பிடத்தக்கன.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இப்போராட்டத்தை "நம்முடைய நிதியியல் அமைப்புமுறை இயங்கும் விதம் குறித்து மிகவும் பரந்தளவில் ஏற்பட்டுள்ள விரக்திக்கு அவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்" எனப் போராட்டதைத் திசை திருப்புவதும் நிலைபெற்றுள்ள கட்டமைப்பைப் பேணுவதும் என்ற உபாயத்தை அரங்கேற்றியுள்ளார். போராட்டத்தில் ஈடுபடுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஜனநாயகக் கட்சி சார்பானவர்களாக இருக்கின்ற நிலையில் ஒபாமாவின் இந்நடவடிக்கைகள் முக்கியத்துவமிக்கதாகின்றன.

இப்போராட்டம் பெற்றுள்ள, பெறப்போகும் வெற்றிகளுக்கு அப்பால் இந்தப் போராட்டம் அமெரிக்கா என்ற நாட்டின் மீது உலக மக்கள் கொண்டுள்ள மாயத்திரைகளை நீக்கி அதன் உண்மை முகத்தைப் பார்க்க வழிசெய்துள்ளது. அத்தோடு முதலாளித்துவப் பொருளாதாரம் மக்களின் பிரச்சினைகளைத் தன்னால் தீர்க்க முடியாது என்ற உண்மையை மீண்டும் ஒரு முறை அம்பலப்படுத்தியுள்ளது.

பெருவணிக நிறுவனங்களுடனான தனது உறவின் பிடியை விட்டுக்கொடுப்பின்றிப் பலப்படுத்துவதை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் அரச இயந்திரம் படிப்படியாகத் தனது போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்மத்தைக் கூர்மைப்படுத்தத் தொடங்கியுள்ளது. கலிஃபோர்னிய மாநிலத்தின் ஒக்லன்ட் பிரதேசத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறை நடத்திய விதம் இதற்கான சமிக்ஞையை வழங்கியுள்ளது.

இந்தப் பின்னணியில் வோல் ஸ்ட்ரீட் முற்றுகைப் போராட்டம் தனது போராட்டத்தின் உள்ளகக் குறைகளை நிவர்த்தி செய்துகொண்டு எதிர்ப்போராட்டங்களை முறியடித்துப் போராட வேண்டிய நிலையில் போராட்டக் களம் உள்ளது.

**"பொருள் உற்பத்தியானது, சுதந்திரமாக ஒன்றிணைந்து செயற்படும் மனிதர்களுடைய உற்பத்தியாகக் கருதப்பட்டு, தீர்மானமான திட்டத்திற்கேற்ப அவர்களால் நடத்தப்படாதவரை, பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் அமைந்த சமூக வாழ்வியக்கம் அதன் புதிர்வாய்ந்த முகத்திரையைக் களையாது."** - மார்க்ஸ்



புதிய மலையகம்,
தேசிய கலை இலக்கியப் பேரவை
இணைந்து வெளியிடும் பாடல்கள்
ஒலிப்பேழை

"காலம் மாறுது"

வெளியீடு : 13-11-2011 - மு. ப 11 மணிக்கு
இ/பெல்மதுளை இல. 01
தமிழ் வித்தியாலயத்தில்..

## வலை

**போதி தர்மரை அவமதிக்கும் ஏழாம் அறிவு!**

தமிழ் இன உணர்வு மிக்க வசனங்களாலும் விளம்பரங்களாலும் இன்று கொண்டாடப்படும் 'ஏழாம் அறிவு' எனும் தென்னிந்திய வணிகத் திரைப்படத்தின் உள்ளார்ந்த அரசியலினை அம்பலப்படுத்தும் கட்டுரை.

இலகு முகவரி : **valai.thulaa.net/44**
http://kalaiy.blogspot.com/2011/11/elaa.html

**Short film : New Boy**

அயர்லாந்துப் பள்ளி ஒன்றிற்குப் புதிதாய்ப் படிக்கவரும் ஆபிரிக்கச் சிறுவன் ஒருவனின் கதை. தம்மிலும் அந்நியனாயிருக்கும் இக் கறுப்பினச் சிறுவனை மற்றைய சிறுவர்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள்; சிறுவர் உள்ளம் எத்தகையது என்றெல்லாம் உணர்த்திச்செல்லும் படம்

இலகு முகவரி : **valai.thulaa.net/43**
www.youtube.com/watch?v=FdeioVndUhs

**முதலாளித்துவத்தின் கருவறையில் அமெரிக்க மக்கள் முற்றுகை!**

வோல் ஸ்ட்ரீட் முற்றுகை தொடர்பாக விரிவாக ஆராய்கிறது இந்தக்கட்டுரை

இலகு முகவரி : **valai.thulaa.net/45**
http://www.vinavu.com/2011/11/04/occupy-wall-street/

**திருவுடை மன்னரைக் காணில்...**

மாபெரும் செல்வப் புதையலைத் தன்னகத்தே கொண்டிருக்கும் செய்தி வெளிவந்தபிறகு சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கேரளத்தின் அனந்தபத்மநாதன் ஆலயம் பற்றிய வரலாற்றுத் தகவல்களுடன் மக்கள் நலச் சிந்தனைகளையும் பகிரும் சுவையான கட்டுரை..

இலகு முகவரி : **valai.thulaa.net/46**
http://vaalnilam.blogspot.com/2011/10/blog-post_29.html

## வீட்டுக்குள்ளும் வானம்..

வி. புருஷோத்மன், பிரான்ஸ்

முட்டை
உடைத்து வந்த குஞ்சுக்கு
உவமையாக நான்.

வீட்டுக்குள்
வானமும் வானங்களும்
சூரியனும் நிலவும் நட்சத்திரங்களும்
மழையும் வெயிலும் மேகங்களும் பறவைகளும்
இருப்பது தெரியாமல்
வெளியில் வானம் பார்க்க வந்த
வெகுளிப் பறவை நான்.

விமானங்களும்
ராக்கட்டுகளும் காத்தாடிகளும்
இரைச்சல்களும் புழுதிகளும்
நிரம்பி வழிகிறது
நான் பார்க்க துடித்த
பார்க்க வந்த வானத்தில்.
குறைந்த பட்சம்
காலையும் மாலையும் கூட
இல்லாதது இந்த வானம்.

முட்டை
உடைத்து வந்த குஞ்சுகள்
நினைத்தாலும் புகமுடியாது
(முட்டைக்குள்ளும்)

(கொடிய விலங்குகள்
வாழும் காட்டில்)
கூண்டிலிருந்து விழுந்த
குஞ்சின் சிறகடிப்போடு

நான்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org